அசல்

13.5.1917 எல்.அ. வெங்குஸாமி.
அசல் 1 நகல் 1.

Replied on 17.5.17

copied

L. A. VENGUSWAMI AIYAR,
PLEADER.

"KUMARA VILAS"
Dindigal, 13 . 5 . 1917.

ஸ்ரீமான் கல்யாணசுந்தரமய்யர் அவர்க
ளுக்கு நமஸ்காரம்.

தங்கள் அருமையான தாயாரவர்கள்
தேகவியோகமான சங்கதி கண்ட கார்டு
கிடைத்து மிக்கவிசனத்தையடைந்தேன்.
தங்கள் குடும்பத்துக்கு நேரும் எந்த
சுபாசுபங்களும் தங்கள் குடும்பத்தினர்
கள் மாத்திரமன்றி நமதுலகமே அநுப
விக்கக் கடமைப்பட்டதாகும். தங்கள்
குடும்பத்தில் நெருங்கிப்பழகிய நானே
இந்த துக்கத்தைக் கேட்க சகிக்கமுடி
யாதிருப்பேனாயின் தாங்கள் எங்ஙனம்
சகிப்பது எவ்விதம். என்றாலும், ஈசன்
செயலை மறுக்க நம்மாலாவதொன்றுமி
ல்லை. ஈசன் திருவருளால் எதுநேர்ந்
தாலும் நாம் அநுபவிக்கக் கடமைப்
பட்டவர்கள். மிதரா அவர்களும் இந்த
த்துயரத்தை எவ்விதம் சகிப்பாரோ
தெரியவில்லை. எல்லாமறிந்தவர்களுக்கு
நான் என்ன ஆறுதல் சொல்லக் கூடும்.

நான் இப்பொழுது தங்களையும் மிதரா
அவர்களையும் வந்து பார்க்க வேணுமெ
ன்று ஆவலுள்ளவனாயிருந்தாலும், சென்ன

அசல்

13.5.1917 எல். எ. வெங்குஸாமி.

அசல் 1 நகல் 1.

பதினைந்து நாளாய், உடல் வாய் எல்லாம்
வெந்து போய் படுத்த படுக்கையாய் இங்கே
வைத்தியம் செய்து கொண்டிருக்கிறேன்.
சென்ற நாலு நாளாக் கொஞ்சம் குணமா
கிக் கொண்டு வருகிறது. - பூரணகுணமான
வுடன் எழுதுகிறேன்.

இப்படிக்கு, தங்கள் அன்புள்ள,

எல். எ. வெங்குஸாமி

F. 272-273

நகல்

Replied on
17-5-17

L. A. Venguswami Aiyar "Kumaravilas".
Pleader. Dindigal. 13.5.1917.

ஸ்ரீமான் கல்யாண சுந்தரமையர் அவர்க
ளுக்கு நமஸ்காரம்.

தங்கள் அருமையான தாயாரவர்கள்
தேகவியோகமான சங்கதி கண்ட கார்டு கி
டைத்து மிக்க விசனத்தை யடைந்தேன். தங்கள்
குடும்பத்துக்கு நேரும் எந்த சுபா சுபங்களும்
தங்கள் குடும்பத்தினர்கள் மாத்திரமன்றித் தமி
ழுலகமே அநுபவிக்கக் கடமைப்பட்டதாகும்.
தங்கள் குடும்பத்தில் நெருங்கிப் பழகிய நானே
இந்த துக்கத்தைக் கேட்கச் சகிக்க முடியாதிருப்
பேனாயின் தாங்கள் வகைரா சகிப்பது எவ்விதம்!
என்றாலும், ஈசன் செயலை மறுக்க நம்மாலாவ
தொன்றுமில்லை. ஈசன் திருவருளால் எது நேர்ந்
தாலும் நாம் அநுபவிக்கக் கடமைப் பட்டவர்கள்.
பிதா அவர்களும் இந்தத் துயரத்தை எவ்விதம் சகிப்
பாரோ தெரியவில்லை. எல்லாமறிந்தவர்களுக்கு நான்
என்ன ஆறுதல் சொல்லக் கூடும்.

நான் இப்பொழுதே தங்களையும் பிதா அ
வர்களையும் வந்து பார்க்க வேணுமென்ற ஆவலுள்
ளவனாயிருந்தாலும், சென்ற பதினைந்து நாளாய்
உடல், வாய் எல்லாம் வெந்துபோய்ப் படுத்த படுக்கை
யாய்த் தக்க வைத்தியம் செய்து கொண்டிருக்கிறேன்.
சென்ற நாலு நாளாகக் கொஞ்சம் குணமாகிக் கொண்டு
வருகிறது. பூரா குணமானவுடன் எழுதுகிறேன்.

இப்படிக்குத் தங்கள் அன்புள்ள
எல். எ. வெங்குஸாமி.

நகல்

மனோலயாக் விஷேஷம் பற்றி.

ஸ்ரீ

எல்.எ. வெங்குஸாமிஐயர்
13.5.1917

page 653 to 654.

F 272-273